**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.13 of 2017

Deposition of D.W.1

Name of the Witness: திரு.மணிவேல்

Date : 24.04.2025

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டேன். டெக்டைல்ஸ் கமிட்டியில் குவாலிட்டி அசுரன்ஸ ஆபிசராக பணி புரிந்தேன். கூட்டு குடும்பமாக முதலில் இருந்தோம். திருமணம் ஆன பிறகு அனைவரும் தனி தனியாக சென்று விட்டோம். எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜித சொத்துக்கள் உள்ளது. அது எங்கள் தாத்தா சம்பாதித்த சொத்து. அது 2 ஏக்கர் விவசாய நிலம். என் அப்பா கண்ணுமாதையன் விவசாயம் செய்து வந்தார். விவசாயம் சார்ந்த ஆடு மாடுகள் வைத்து தொழில் செய்து வந்தார். பூர்வீக சொத்தில் வந்த வருமானத்தை வைத்து தான் அவர் குடும்பத்தை பராமரித்து வந்து அவரது பிள்ளைகளையும் படிக்க வைத்தார்.

2) பூர்வீக சொத்தில் வந்த வருமானத்தை வைத்து என் அப்பா சொத்துக்களை வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. அவர் சுயமாக வேலைக்கு சென்று சம்பாதித்த பணத்தில் தான் வாங்கியிருக்கிறார். என் அப்பா சுயமாக தொழில் செய்து அதில் வந்த வருமானத்திற்காக ஆவணங்களை நான் பார்த்திருக்கிறேனே என்றால் அது போல்

ஆவணங்கள் இல்லை. என்னுடைய அண்ணன் மாணிக்கத்திற்கு ஓசூரில் 393 New ASTC HUDCO Hosur ஒரு வீடும், தருமபுரி டீச்சர் காலனியில் ஒரு வீடும் உள்ளது- தருமபுரி டீச்சர் காலனியில் உள்ள வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது. சேலத்தில் வீட்டு மனைகளும் தருமபுரி நியூ காலனியில் வீட்டு மனைகள் உள்ளது. அதற்கான ஆவணங்களை நான் பார்த்ததில்லை. என் பெயரில் பெங்களூரில் வீடுள்ளது Shopping complex இல்லை. என்னுடைய தம்பி மகேந்திரனுக்கு பெங்களூரில் அவர் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் உள்ளது. எனக்கு ஓசூரில் வீடுள்ளது.

3) அசல் வழக்கு எண் 13/2017ல் நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த வழக்கிற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. அந்த வழக்கு பற்றி என் அம்மா 2019ல் இறந்த பிறகு தான் எனக்கு தெரியும். நானும் எனது சகோதரர்களும் எனது அம்மாவின் தேவைக்கு பணம் கொடுப்போம். அசல் வழக்கு எண் 13/2017 வழக்கு சொத்தை கிரையம் பெறுவதற்கு எனது அம்மாவிற்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. என் அண்ணன் மாதையன் பணம் கொடுத்துள்ளார். மாதையனும், எனது அம்மாவும் சேர்ந்து தான் சொத்தை வாங்கினார்கள். இந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. என் அம்மாவும், என் அண்ணன் மாதையனும் என்னிடம் சொன்னார்கள். அசல் வழக்கு எண் 13/2017 சொத்திற்கு எப்போது மனு கொடுக்கப்பட்டு பட்டா எப்போது வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது.

4) என் அம்மா இறந்த பிறகு அம்மாவின் வாரிசு என்பதால் அசல் வழக்கு எண் 13/2017 வழக்கில் பாகம் கேட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன். அது போல் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 13/2017 வழக்கு தாக்கல் செய்யும் போதே அந்த தாவா சொத்து என் அம்மா பெயரில் இல்லையென்றால் சரிதான். எனது அம்மாவை ஏமாற்றி ஆவணம் செய்து விட்டார்கள். என் அம்மா உயிருடன் இருக்கும் போது மாணிக்கம், செல்வி அவரை ஏமாற்றி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கி கொண்டதாக புகார் கொடுத்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் வழக்கு போட்டுள்ளார்கள். என் அம்மா உயிருடன் இருந்த வரை மாணிக்கம் பேரில் எழுதி பத்திரம் ரத்து செய்ய ஆவணம் எதுவும் எழுதவில்லை.

5) அசல் வழக்கு எண் 13/2017ல் என் அம்மா இறந்த பிறகு எனக்கு அந்த சொத்தில் 1/2 பாகம் உள்ளது என்று பதிலுரையில் சொல்லியுள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4வது பத்தியில் உள்ள விவரங்களை எனது அம்மா சொல்லி தான் எனக்கு தெரியும் என்று விவரங்களை குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். 10.03.2016க்கு பிறகு என் தாய் மாமா அக்குமரனை விசேசங்களில் பார்த்து பேசியிருக்கிறேன். என் அம்மா இறந்த பிறகு நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 238/2023 வழக்கு விவரங்களை நான் படித்து பார்த்திருக்கிறேன். அதற்கு பிறகு அக்குமரனை சந்திந்து சார்பதிவாளர்

அலுவலகத்தில் என்ன நடந்தது என்று நான் கேட்கவில்லை. எனது அம்மா கேட்டார். இதுவரையிலும் நான் அவரை கேட்கவில்லை.

6) என்னுடைய பெரிய அண்ணன் மாதையன் மனைவி கீதாவிற்கு என் அப்பா பேரில் இருந்த சொத்துக்களை பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் படி வழக்கு போட்டு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு சரியாக விவரம் தெரியாது. என் அப்பா அவருடைய சுய சம்பாதிய சொத்தை விற்றுள்ளார். என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்பதற்கு ஆவணம் பார்த்து இருக்கிறீர்களா என்றால் ஆவணத்தின் ரிஜிஸ்தர் காப்பியை நான் பார்த்துள்ளேன். என் அப்பா கூட்டு குடும்ப வருமானத்திலிருந்து இருந்துதான் சொத்துக்களை வாங்கினார் என்றாலும், என் அப்பாவிற்கு தனிப்பட்ட சொத்துக்களே இல்லை என்றால் சரியல்ல.

7) என் அம்மா 2013லிருந்து உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்தார். என் அம்மாவிற்கு 2013ல் பக்கவாதம் வந்தது. 2014ல் சிகிச்சைக்கு பிறகு சரியாகி விட்டார். வயது முதிர்வின் காரணமாகவும், பக்கவாதம் காரணமாகவும் எனது அம்மாவால் தனியாக எங்கும் போகமுடியாது என்றால் சரியல்ல. 2014க்கு பிறகு தனியாக போவார், வருவார். தற்போது வரை கூட்டு குடும்ப சொத்துக்கள் பாகபிரிவினை எதுவும் நடக்கவில்லை. வழக்கு நடந்து கொண்டு இருக்கிறது. கிருஷ்ணகிரி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது. வழக்கு எண்

நியாபகம் இல்லை. அது போல் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*